தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-2-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சின்ன வெங்காயத்தின் விலை முன்னறிவிப்பு**

தென்னிந்திய மாநிலங்களாகிய தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய பகுதிகளில் சின்ன வெங்காயம் பெருமளவில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாடு மட்டும் நாட்டின் மொத்த உற்பத்தியில் 85 சதவீதம் பங்களிக்கின்றது. திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் சின்ன வெங்காயத்தை அதிகளவு பயிரிடுகின்றன.

சின்ன வெங்காயம் பெரும்பாலும் நாற்றங்கால் மற்றும் விதைப்பு வெங்காயம் மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக விதைப்பு வெங்காயம், விதை உற்பத்தி செய்யவே அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. தை மற்றும் மாசி பட்டத்தில் நாற்றங்கால் முறையில் பெரும்பாலும் சாகுபடி செய்யபடுகின்றது. இப்பட்டத்தில் சாகுபடி செய்யபடும் சின்ன வெங்காயமானது ஏற்றுமதிக்கு அதிகளவு விரும்பப்படுகிறது. இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் சின்ன வெங்காயம் அதிகளவு ஏற்றுமதி செய்கின்றன.

தற்போது நாமக்கல், கோபிச்செட்டிபாளையம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களிருந்து வரத்து கோயம்புத்தூர் சந்தைகளுக்கு வருகிறது. மேலும், மைசூரிலிருந்து வரும் வரத்தானது மார்ச்'19 வரை சந்தைக்கு வரும். வர்த்தக ஆதாரங்களின் படி, ரபீ பருவத்தில், கர்நாடகாவில் குறைந்த மழை இருந்தாலும் வெங்காய உற்பத்தி இயல்பாகவே உள்ளதால் பண்ணை விலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருக்காது எனக் கருதப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 12 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயம் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது.

ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான சின்ன வெங்காயம் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 25 -27 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி மற்றும் விதை வெங்காயத்தின் தேவைகளை பொறுத்து விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் :- 0422-6611374

மக்கள் தொடர்பு அலுவலர்